# வானவில்

VAANAVIL
ISSUE – 16 APRIL 2012

இதழ் - 16 சித்திரை 2012


# அரசாங்கம் அவசியம் நிறைவேற்ற வேண்டிய இரண்டு விடயங்கள்

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், இலங்கைக்கு எதிரான மேற்குலகின் அழுத்தங்கள் ஒரு ஒழுங்குமுறையான வழி முறைகளில் அதிகரித்துச் சென்ற வண்ணம் உள்ளன. அதன் நோக்கம், இலங்கையில் ஜனநாயக நெறிமுறைகளை வலுப்படுத்துவதும், மனித உரிமைகளைப் பேணுவதும் மட்டும் அல்ல. இலங்கையில் ஐ.நா. சார்பாக முன்னர் பணிபுரிந்த அதிகாரி ஒருவா வெளிப்படையாகப் போட்டுடைத்தது போல, இலங்கையில் மேற்குலகம் தமக்குப் பிடித்த ஆட்சி மாற்றம் ஒன்றக்கான முயற்சியை அது இலக்காகக் கொண்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அவர்களின் அந்த நோக்கத்தை ஜெனீவா வாக்கெடுப்பு நாட்களில், அங்கு இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாகப் பணிபுரியும் தாமரா குணநாயகமும் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டியிருந்தார்.

தமது எதிர்ப்புத் தீர்மானத்தின் மூலம் மேற்குலகு இலங்கைக்கு வழங்கியுள்ள காலக்கெடு பெரும்பாலும் ஒரு வருடமாகத்தான் இருக்கும். இம்முறை இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியாவும் ஆதரித்த காரணத்தால், கடந்த காலங்களைப் போல இனி வரும் காலங்களில் இந்தியாவின் தடைகள் பற்றி அவர்கள் பெரிதாக எதுவும் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. அதனால்தான் ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் சிக்கியுள்ள இந்தியா, அமெரிக்கத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை அமுல்படுத்துவதின் மூலம், மேற்குலகு எதிர்காலத்தில் இலங்கை மீது செலுத்தவுள்ள நிர்ப்பந்தங்களைக் குறைக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளது.

இலங்கை மேற்குலகு எதிர்பார்க்கும் சில விடயங்களைத் தன்னும் செய்யாமல் காலம் கடத்தினால், அதன் காரணமாக இலங்கை மீது ஏற்படப்போகும் அதீத அழுத்தங்களையிட்டு இந்தியா மிகவும் கவலைப்படுவதாகத் தெரிகிறது.

**THE 13TH AMENDMENT**

- Sinhala, Tamil 'shall also be an official language' of Sri Lanka, with English as a 'link language'
- The north and east to be merged into one province, subject to a referendum
- Provincial councils to be elected every five years
- A governor with executive powers to be appointed by the president in each province

இந்தியாவைப் பொறுத்தவரை அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரித்திருந்தாலும், மேற்கொண்டும் இலங்கை விவகாரங்களில் மேற்குலகு தலையிடுவதை அது விரும்பவில்லை. அவ்வாறு மேற்குலகின் செயற்பாடுகள் அதிகரித்தால், அது இறுதியில் இந்திய நலன்களுக்கு ஆபத்தாக முடியும் என அதற்குத் தெரியும். ஏற்கெனவே இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட கையோடு, இந்தியாவின் காஸ்மீர் பகுதியில் இந்தியாவின் விசேட இராணுவப் பிரிவு இழைத்து வரும் மனித உரிமை மீறல்கள் குறித்து மேற்கின் வெளிப்படையான விமர்சனம் வெளிவந்துவிட்டது.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் கரிசனை, அங்கு நடைபெற்ற இறுதி யுத்த நேர மனித உரிமை மீறல்கள் பற்றியதல்ல. இன்னும் சொல்லப்போனால், புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஆரம்பத்திலிருந்தே இந்தியாவுக்கும் முக்கியமான பங்கு உண்டு. எனவே போர்க்குற்றங்கள் இந்தியாவுக்கு எதிராகவும் சுமத்தப்படலாம். அதுவும் இந்தியா அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரித்ததிற்கு ஒரு காரணம் என்ற அபிப்பிராயமும் சில தரப்புகளிடையே உண்டு.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…

# வெள்ளை வான்களுக்கு ஓய்வு கொடுங்கள்

இலங்கையில் மூன்று வருடங்களுக்கு முன்னர் முள்ளிவாய்க்காலில் புலிகளுடனான யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டபோது, அரசியலோடு தொடர்படைய சகலவிதமான வன்முறைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டதாவே எல்லோரும் எதிர்பார்த்தனர். எங்கு, எப்போது இராணுவத்திற்கும் புலிகளுக்கும் நேரடி மோதல் நிகழுமோ, புலிகளின் தற்கொலைக்குண்டு வெடிக்குமோ அல்லது அப்பாவி மக்கள் கொல்லப்படுவார்களோ என மூன்று வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலைமை இன்று முற்றிலும் மாறிவிட்டது. எனினும் அரசியலோடு தொடர்புடைய வன்முறைகள் முற்றுமுழுதாக நிறுத்தப்பட்டுள்ளதாக கூறமுடியாது என்பதையே அண்மைக்கால சம்பவங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மூன்று வருடங்களில் நாடளாவிய ரீதியில், இதுவரையில் துப்புத்துலக்கப்படாத பல கொலைகள், தனிமனிதத் தாக்குதல்கள், வெள்ளைவான் கடத்தல்கள், கப்பங்கோரிய கடத்தல்கள், கொள்ளைகள், பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான பாலியல் பலாத்காரங்கள் என பல்வேறு சம்பவங்கள் நடந்துள்ளன. இலங்கையின் அரசு சார்பான மற்றும் அரசு சார்பற்ற ஊடகங்கள் இந்த சம்பவங்களை உடனுக்குடன் செய்திகளாக வெளியிட்டு ஊர்ஜிதப்படுத்தியுமுள்ளன.

பல சம்பவங்களில் அரச பாதுகாப்பு படையினரே ஈடுபட்டுள்ளதாக, மனித உரிமை அமைப்புகளும் சில உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களும் குற்றஞ்சாட்டுகின்றனர். ஆனால் அவ்வாறு அரச பாதுகாப்பு படையினர் மீது குற்றஞ்சாட்டப்பட்ட பல்வேறு சம்பவங்களில் அரச பாதுகாப்பு படையினர் சம்பந்தப்படவில்லையென பின்னர் நிரூபணமாகியுமுள்ளது என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும். குறிப்பாக வடக்குக் கிழக்கில் தமிழ் பெண்கள் மீது நிகழ்ந்த பாலியல் பலாத்காரச் சம்பவங்களில் அரச பாதுகாப்பு படையினர் நோக்கியே விரல்கள் சுட்டப்படுவதை புலி சார்பு தமிழ் ஊடகங்கள் ஒரு வழக்கமாகவே கொண்டுள்ளன. ஆனால் இக்குற்றங்களில் சிலவற்றினை 'தமிழ்' ஆண்களே புரிந்துள்ளதாக கண்டறியப்பட்டு, அக்குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டும் உள்ளனர்.

ஒரு சில சம்பவங்களில் இவர்கள்தான் குற்றவாளிகளெனத் தெரிந்தும், அவர்கள் இன்னமும் கைது செய்யப்படாமலோ அல்லது வேண்டுமென்றே தப்பவிடப்பட்டோ உள்ளனர். இதற்கு உதாரணமாக கடந்த வருடம் நிகழ்ந்த இரு சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிரமுகர்களுக்கு இடையிலான ஒரு மோதல் சம்பவத்தை இங்கு குறிப்பிடலாம். ஜனாதிபதியின் ஆலோசகர் பாரத லக்ஸ்மனையும் அவரது ஆதரவாளர்களையும், அக்கட்சியின் இன்னொரு பிரமுகரான துமிந்த சில்வாவும் அவரது ஆதரவாளர்களும் இடைமறித்து துப்பாக்கிச்சூடு நிகழ்த்தியதில் பாரத லக்ஸ்மன் மற்றும் அவரது இரு மெய்ப்பாதுகாவலர்களும் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தில் பாரத லக்ஸ்மனின் மெய்ப்பாதுகாலர்கள் திருப்பிச்சுட்டதில் துமிந்த சில்வா படுகாயமடைந்ததாக கூறப்படுகின்றது. இவ்வாறு காயமடைந்த கொலைக்குற்றவாளியான துமிந்த சில்வாவை சிகிச்சைக்காக சிங்கப்பூருக்கு செல்வதற்கு அனுமதித்துவிட்டு, அவரது மெய்ப்பாதுகாலர்கள் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, பிணை மறுக்கப்பட்ட நிலையில் சிறையிலடைக்கப்பட்டு உள்ளனர்.

1989 ஆண்டில் பதவிக்கு வந்த பிரேமதாசா அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் வெள்ளை வான்களின் கடத்தல்களுக்கு நீண்ட வரலாறு உள்ளது. வெள்ளை வான் என்றாலே, அது அரச புலனாய்வுப்பிரிவினரின் வான் என்றே எவரும் கூறுவார்கள். இந்த வெள்ளை வான்களில் கடத்தப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் உயிருடன் விடுவிக்கப்படவில்லை.

இன்றுள்ள உலக நிலைமையில், முன்னேறிய முதலாளித்துவ சமூக அமைப்பு நிலவும் நாடுகளிலிருந்து வறிய மூன்றாம் உலக நாடுகள் வரை, ஜனநாயக ரீதியான போராட்டங்களில் நம்பிக்கையற்றவர்களில் ஒரு பகுதியினர் வன்முறைப்பாதையினை நாடுகின்றனர். இவ்வாறு வன்முறைப்பாதையினை நாடும் சிறுபான்மையினரின் சிந்தனைகளை முற்றுமுழுதாக ஒழிக்க முடியாதென்றே உளவியலாளர்கள் கூறுகின்றனர். சட்டத்தை பாதுகாக்க வேண்டிய அரச படையினர், இவ்வாறானவர்கள் மீது அதே வன்முறை உத்திகளை பிரயோகிப்பதானது, நாட்டில் நிலவும் குறைந்தபட்ச ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைப்பதாகவே அமையும். அத்தோடு மனித உரிமைமீறல் என்று வெளியார் எமது நாட்டில் வாலை நுழைப்பதற்கு நாமே இடங்கொடுத்தவர்கள் என்றாகிவிடுவோம். *

**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு கட்டுரைகள், துணுக்குகள், தகவல்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் என்பனவற்றை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com



# நெல்லின் உத்தரவாத கொள்வனவு விலை அதிகரிக்கப்பட வேண்டும்

**நெ**ல்லின் உத்தரவாத கொள்வனவு விலையை அதிகரிக்கக்கோரி கடந்த சில வாரங்களாக நாட்டின் பல பகுதிகளில் விவசாயிகள் ஆர்ப்பாட்டங்கள் செய்ததைத் தொடர்ந்து, நெல்லின் உத்தரவாதக் கொள்வனவு விலையை அதிகரிப்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சு செயலாளர் டபிள்யூ.சகலசூரிய தலைமையிலான குழுவொன்றை விவசாய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.

அமைச்சரின் சொந்தத் தொகுதியான பொலநறுவவே முழுக்க முழுக்க விவசாயப் பிரதேசமாகும். அங்குள்ள பல விவசாயிகள் அமைப்புகளும், நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள விவசாயிகள் சங்கங்களும் நெல்லின் உத்தரவாத விலையை அதிகரிக்கக்கோரி கடந்த காலங்களில் தொடர்ச்சியாகக் கோரிக்கைகளை முன்வைத்து வந்துள்ளன. இருப்பினும் அவர்களது கோரிக்கைகள் இதுவரை கவனத்தில் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

நாட்டின் விலைவாசி உயர்வு கடந்த சில வருடங்களாக பல மடங்கு அதிகரித்து வந்த போதிலும், முழுநாட்டுக்கும் உணவு அளித்து வரும் விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லுக்கு மட்டும் உரிய விலை வழங்கப்படவில்லை. 1965ல் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஏழு கட்சிக் கூட்டணி (இதில் தமிழரசு — தமிழ் காங்கிரஸ் கட்சிகளும் அங்கம் வகித்தன) ஆட்சிக்கு வந்தபோது கட்டுப்பாடற்ற இறக்குமதிக் கொள்கையை அமுல்படுத்தியது. இதனால் விவசாயிகள் - குறிப்பாக வடபகுதி விவசாயிகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டனர். அத்துடன் அதுவரை காலமும் முன்னைய அரசாங்கங்களால் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வந்த இலவச அரிசி மானியத்தையும் அவ்வரசு வெட்டியது.

அந்தச் சந்தர்ப்பத்திலும் நெல்லின் உத்தரவாத விலையை அதிகரிக்கக்கோரி விவசாயிகள் கோரிக்கைகளை முன்வைத்தனர். அன்றைய காலகட்டத்தில் சுறுசுறுப்பாகச் செயல்பட்ட (இலங்கை புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான) அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தில் நாடு பரந்த ரீதியில் விவசாயிகள் ஸ்தாபன ரீதியாக அணிதிரண்டிருந்த காரணத்தால், அவர்களது கோரிக்கை வலுவுடன் முன்னெடுக்கப்பட்டது. விவசாயிகளின் தொடர்ச்சியான போராட்டங்களால் அரசாங்கம் நெல்லின் உத்தரவாத விலையை புசல் ஒன்றுக்கு 12 ரூபாவிலிருந்து 14 ரூபாவாக உயர்த்த ஒப்புக்கொண்டது. ஆனால் விலையை உயர்த்தியதாகப் பாசாங்கு செய்த அரசாங்கம், அதேநேரத்தில் ரூபாவின் மதிப்பை 20 வீதத்தால்

குறைத்ததின் மூலம், உண்மையில் நெல்லின் விலையை முன்னரிலும் பார்க்க 80 சதம் குறைத்து 11 ரூபா 20 சதமாக ஆக்கிவிட்டது.

தற்பொழுது நாட்டு ரக நெல்லை அரசாங்கம் கிலோ 28 ரூபாவுக்கு கொள்வனவு செய்கின்றது. சம்பா ரக நெல்லை கிலோ 30 ரூபாவுக்குக் கொள்வனவு செய்கின்றது. அதாவது கடந்த 47 வருட காலத்தில், நெல்லின் உத்தரவாத விலை சொற்பளவிலேயே அதிகரித்துள்ளது! இது விவசாயிகளுக்குச் செய்துள்ள மிகவும் கொடூரமான அநியாயம் என்று சொல்ல வேண்டும். இந்தக் காலகட்டத்தில் போதிய அளவு இல்லாவிட்டாலும், வாழ்க்கைச் செலவு உயர்வுக்கேற்ப பல தடவைகள் அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மிகவும் மோசமான வாழ்க்கைச் சூழலில் உள்ள மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளங்கள் கூட பல தடவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதற்கான முக்கிய காரணம் அவர்கள் ஸ்தாபனரீதியாக அணிதிரண்டு இருப்பதும் போராடுவதும்தான்.

விவசாயிகளைப் பொறுத்தவரை, 1977ல் ஐ.தே.க அரசு ஆட்சிபீடமேறிய பின்னர் அவ்வரசு அமுல்செய்த கட்டுப்பாடற்ற இறக்குமதிக் கொள்கை, திறந்த பொருளாதாரக் கொள்கை என்பனவற்றின் காரணமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டதுடன், அவர்களது ஸ்தாபன அமைப்புகளும் சீர்குலைக்கப்பட்டு உதிரிகளாக்கப்பட்டுவிட்டனர். அதனால் நாட்டில் இப்பொழுது மிகவும் பாதிப்புக்குள்ளாகும் மக்களாக விவசாயிகளே இருக்கின்றனர்.

இன்றைய காலகட்டத்தில், விவசாயிகளின் உற்பத்திக்கு அவசியம் தேவையான விதைகள், உரம், கிருமிநாசினி, உழவு கூலி, கூலிகளின் சம்பளம் என்பன அதிகரித்துவிட்டதால், விவசாயிகள் தாம் உற்பத்தி செய்யும் நெல்லையோ மற்றும் உப உணவுப் பொருட்களையோ நியாயமான விலைக்கு விற்க முடியாதவர்களாக இருக்கின்றனர். அதனால் பல விவசாயிகள் உணவுச் செய்கையில் ஈடுபடுவதை விடுத்து கூலி வேலை செய்பவர்களாக மாறி வருகின்றனர்.

இலங்கையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகளே விவசாயிகளுக்குப் பல நல்ல காரியங்களைச் செய்தன. அவ்வரசு 1960 – 1964 காலகட்டத்தில் கொண்டு வந்த நெற்காணி மசோதா மிகவும் முற்போக்கான ஒன்று. பெரும் செல்வந்த விவசாயிகளுக்குப் பாதகமான இந்த மசோதாவை பாராளுமன்றத்தில் ஐ.தே.கவுடன் சேர்ந்து தமிழரசுக் கட்சியும் எதிர்த்தது. இதுதவிர நில உச்ச வரம்புச் சட்டம், பயிர்ச்செய்கைக் குழுக்கள், உத்தரவாத விலைத் திட்டம், கமநல சேவை நிலையங்கள், விவசாய விளைபொருள் குழுக்கள், நெல் சந்தைப்படுத்தும் சபை, அரசாங்க உழவு இயந்திர நிலையங்கள், மக்கள் வங்கி மூலம் கடனுதவித்திட்டங்கள், விவசாயிகள் காப்புறுதித் திட்டங்கள் என பல்வேறு விவசாயிகள் நலத் திட்டங்களை சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரிகளும் கூட்டாக நிர்வகித்த அரசுகளே கொண்டுவந்ததை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் இன்று ஐ.தே.க கட்சி அரசு 1977ல் கொண்டு வந்த திறந்த பொருளாதாரக் கொள்கை, ஏகாதிபத்திய உலக மயம் என்பன காரணமாகவும், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போட்ட நிபந்தனைகள் காரணமாகவும் விவசாயிகள் எல்லாவற்றையும் இழந்து ஒட்டாண்டிகளாக நிற்கின்றனர். இலங்கை இன்று எதிர்நோக்குகின்ற ஏகாதிபத்திய அழுத்தங்கள், பொருளாதாரத் தடைக்கான சாத்தியக்கூறுகள் மத்தியில், விவசாயிகளே நாட்டு மக்களை பசி பட்டினியிலிருந்து காப்பாற்றக்கூடியவர்களாக இருக்கின்றனர். எனவே அவர்களது உற்பத்திகள் இடையூறின்றி நடைபெறுவதற்கான சகல வழிவகைகளையும் செய்வது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும்.

தற்போதைய சூழ்நிலையில் தாம் உற்பத்தி செய்யும் நெல்லுக்கு குறைந்தபட்சம் கிலோ ஒன்றுக்கு 40 ரூபா வழங்க வேண்டும் என விவசாயிகள் கோருகின்றனர். இந்தக் குறைந்தபட்சக் கோரிக்கை மிகவும் நியாயபூர்வமானது. அவர்களது கோரிக்கையை நிறைவேற்றி வைப்பது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும். அத்துடன் முன்னைய காலங்களில் செய்தது போன்று உரம், கிருமிநாசினி என்பனவற்றை மானிய விலைக்கு வழங்க வேண்டும். இயற்கை அனர்த்தங்கள், நோய் தாக்கங்கள் காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டு, அதனால் அவர்கள் வங்கிகளில் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போகின்ற போது, அடுத்த போகச் செய்கைக்கு வங்கிகள் கடன் கொடுக்க மறுத்துவிடுகின்றன. அவ்வாறு செய்யாமல் அவர்கள் பெற்ற கடன்களை ரத்துச் செய்ய வேண்டும் அல்லது நீண்டகால தவணை முறைகளில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்ய வேண்டும்.

வங்கிகள் அவ்வாறான ஏற்பாட்டைச் செய்யாவிட்டால், விவசாயிகள் தனிப்பட்ட கந்து வட்டிக்காரர்களின் பிடியில்தான் சிக்குவார்கள். இப்பொழுது அநேகமான பிரதேசங்களில் அதுதான் நடைபெறுகின்றது. விவசாயம் செய்வதற்காக தனிப்பட்ட முதலாளிகளிடம் அதிகரித்த வட்டிக்கு விவசாயிகள் பணம் பெறுகிறார்கள். பணத்தை அதிக வட்டிக்கு வழங்குவதுமல்லாமல், விளையும் நெல்லை சந்தை விலையிலும் பார்க்க மிகவும் குறைந்த விலைக்கே தமக்கு வழங்க வேண்டும் என முதலாளிகள் நிபந்தனை விதிக்கிறார்கள். அப்படி

நீர் உயர வரப்பு உயரும்,
வரப்பு உயர நெல் உயரும்,
நெல் உயரக் குடி உயரும்,
குடி உயரக் கோன் உயரும்.

– ஔவையார்

நெல்லை வாங்கும் போது பெரும்பாலான பகுதிகளில் ஒரு கிலோ நெல்லை 16 ரூபாவுக்கு மட்டுமே வாங்கி விவசாயிகளின் உழைப்பை மோசமாகச் சுரண்டுகிறார்கள்.

இன்னும் சில இடங்களில் அரசாங்க நெல் கொள்வனவு களஞ்சியங்களில் போதிய இடவசதி இல்லாமையால், தவிர்க்க முடியாமல் பணத் தெவைக்காக தனிப்பட்ட வியாபாரிகளுக்கு குறைந்த விலைக்கு விற்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

தற்போது விவசாய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ள குழு நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து நிலைமைகளை ஆராய்ந்த பின்னர், நிதியமைச்சுச் செயலாளர் பி.பி.ஜெயசுந்தரவிடம் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும் எனவும், அதன் பின்னரே நெல்லின் உத்தரவாத விலையை அதிகரிப்பது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. உண்மையில் இதற்கு நீண்ட காலம் எடுக்கும். அத்துடன் திறைசேரியில் நெல்லின் உத்தரவாத விலையை அதிகரிப்பதற்குப் போதிய பணம் இல்லையென்று நிதியமைச்சுச் செயலாளர் கையை விரித்துவிட்டால், விவசாயிகளின் எதிர்பார்ப்பு கானல் நீராகிவிடும்.

நாட்டில் இப்பொழுது தேசிய வருவாய் மூலமும், பொதுமக்களின் வரிப்பணம் மூலமும் கிடைக்கும் ஏராளமான பணம், வீண் விரயம் செய்யப்படுவது ஒன்றும் இரகசியமான விடயமல்ல. அப்பணத்தில் ஒரு சிறு பகுதி போதும் விவசாயிகளின் நெல் உத்தரவாத விலையை அதிகரிக்கக் கோரும் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பதற்கு. எனவே அரசாங்கம் இவ்விடயத்தில் விரைந்து செயற்பட்டு விவசாயிகளின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றி வைப்பது அவசர அவசியமானது.

அதேநேரத்தில் ஏனைய தொழிற்துறைத் தொழிலாளர்களைப் போன்று, விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் மீண்டும் தம்மை ஸ்தாபனரீதியாக அணிதிரட்டி ஐக்கியத்தை உருவாக்குவது அவசியம். அண்மைக்காலமாக பல்வேறு துறைகளைப் போலவே, விவசாயத் துறையிலும் உதவி, ஊக்குவிப்பு, விழிப்புணர்வு என்ற போர்வையில், சர்வதேச — உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடுருவல் செய்து, விவசாயிகளின் சுயாதீனத் தன்மையை சீரழித்து வருகின்றன. அதிலிருந்து விடுபட்டு சுயாதீனமாகவும், அதேநேரத்தில் நாட்டின் ஏனைய உழைக்கும் மக்களுடன் ஐக்கியத்தைப் பேணும் வகையிலும், விவசாயிகள் தம்மை அணிதிரட்ட வேண்டும். இந்த விடயத்தில் விவசாயிகளுக்கு வழிகாட்டி உதவ வேண்டியது முற்போக்கு சக்திகளின் கடமையாகும்.

அமைதியில் உறங்கிக் கிடக்கும் சாதுக்களான விவசாயிகளை, தேச விரோத சக்திகள் தவறாக வழிநடாத்தாமலும், அவர்கள் வீதிக்கு இறங்கிப் போராடாமலும் இருக்க, அவர்களது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பது அரசாங்கத்தின் கரங்களில்தான் இருக்கின்றது.

- ***ச.சுப்பிரமணியம்***
**கிளிநொச்சி மாவட்ட முன்னாள்**
**இணை அமைப்பாளர்**
**அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம்**

# ‘பிரிக்ஸ்’ நாடுகள் அமெரிக்க டொலரைக் கைவிட முடிவு!


அமெரிக்கா தலைமையிலான உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் நெருக்கடி மேலும் மேலும் ஆழமடைந்து வருவதினால், தமது பொருளாதாரங்களை அதிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு ‘பிரிக்ஸ்’ அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் தமக்கிடையிலான வர்த்தகப் பரிவர்த்தனைகளில் அமெரிக்க டொலரை கைவிட முடிவு செய்துள்ளன. இந்த பிரிக்ஸ் அமைப்பில் உலக சனத்தொகையில் 40 வீதத்தைக் கொண்டிருக்கின்ற ஐந்து நாடுகளான பிரேசில், ரஸ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா என்பன அங்கம் வகிக்கின்றன.

பிரிக்ஸ் அமைப்பின் 4ஆவது மாநாடு அண்மையில் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடைபெற்ற போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது. இம்மாநாட்டில் பிரேசில் ஜனாதிபதி டில்மா ரூசெப், ரஸ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெத்வதேவ், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், சீன ஜனாதிபதி ஹூ யுன்டாவோ, தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் ஜூமா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில இத்தலைவர்கள் தற்போதைய உலகப் பொருளாதார நிலைமைகள் குறித்து தீவிரமாக ஆராய்ந்தனர்.

புவிக்கோளத்தின் தென்பகுதியைச் சேர்ந்த இந்த பிரிக்ஸ் அமைப்பு நாடுகள் டொலரைக் கைவிட முடிவெடுத்தது மட்டுமின்றி, தமது பொருளாதாரத்தை மேற்கத்தைய முதலாளித்துவப் பிடியிலிருந்து விடுவிக்கும் நோக்குடன், ‘பிரிக்ஸ் வளர்ச்சி வங்கி’ அல்லது ‘தெற்கு வளர்ச்சி வங்கி’ என்றொரு நிதிக் கட்டமைப்பையும் உருவாக்குவதற்குத் தீர்மானித்துள்ளன. மேற்குலகம் தற்பொழுது தமது நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை வளர்முக நாடுகளுக்கு மாற்றிவிடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டுள்ளன. அவை மறைமுகமான செயற்பாடுகளில் மட்டுமின்றி, நேரடி நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளதையே எண்ணெய் வளமிக்க லிபியாவில் மேற்கொண்ட ஆட்சி மாற்றமும், சிரியா, ஈரான் போன்ற நாடுகளின் ஆட்சிகளை அகற்ற மேற்கொள்ளும் முயற்சிகளும் எடுத்துக் காட்டுவதாக அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

இந்த நிலைமையில், பிரிக்ஸ் நாடுகள் எடுத்துள்ள முடிவுகள் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவை எனக் கருதப்படுகிறது. *

# தமிழுக்கு "ழ" அழகு



**தமிழ்ப்பிராமி எழுத்துக்கள்**

ங, ஞ, ழ போன்றவற்றையும் சொல்லமுடியும். ''**ழ**'' வின் அழுத்தந்திருத்தமான உச்சரிப்பிற்காக <u>அழுகி</u> ஒ**ழு**கி வி**ழு**ந்த வா**ழை**ப்ப**ழ**த்தில் ஏ**ழை**க்கி**ழ**வன் வ**ழு**க்கி வி**ழு**ந்தான் என பயிற்சியெடுத்த பள்ளிக்காலமும் உண்டு.

## மோகன்

தமிழ்மொழியில் காணப்படும், லகர, ழகர, ளகர ஒலி பேதங்கள்போல் மலையாளத்தில் மூன்றுபேதங்களும், இதர மொழிகளான கன்னடம், தெலுங்கு, சிங்களம் போன்றவற்றில் இரண்டுவிதமான பேதங்களுமிருக்கின்றன.

**நெ**ல்லுக்கு நாற்றழகு, தென்னைக்கு கீற்றழகு, ஊருக்கு ஆறழகு, ஊர்வலத்தில் தேரழகு, தமிழுக்கு ''ழ'' அழகு என்றார் கவிப்பேரரசு வைரமுத்து. அவரின் பாடல் வரிகளெல்லாம், காட்சிகள் கண்முன்னே விரியும் வலிமை பெற்றவை. அதற்கான அனுபவ சுகங்களை வேண்டி மனசு தவிக்கும் வரிகளவை. மொழியை நறுக்குத் தெறித்தாற்போல் சரியான அளவுப்பரிமாணத்தில் பயன்படுத்தும் ஆற்றலை பாடலாசிரியர்களிடமிருந்துதான் நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

உலகிலுள்ள ஆயிரக்கணக்கான மொழிகளும் தமக்கேயுரித்தான சில சிறப்பான எழுத்துக்களையும், எழுத்துக்களாலான சொற்களையும் தன்னகத்தே கொண்டு, அவற்றிற்கு சிறப்பையும், பெருமையையும், நயத்தையும் கொடுத்தவண்ணம் தானிருக்கின்றன. யுனெஸ்கோ தகவலின்படி உலகளாவியரீதியில் ஆறாயிரம் மொழிகளிருப்பதாகத் தெரியவருகிறது

பொதுவாக தமிழ் மட்டுமல்ல, அனைத்து மொழிகளினது எழுத்து முறைமைகளும் ஒலிப்பியலை (Phonetics) அடிப்படையாகக் கொண்டே இயங்குகின்றன. அவை குறுக்கம், அளபெடை மற்றும் புணர்ச்சி நெறிகளிற்குட்பட்டே ஒலிக்கப்படுகின்றன. தமிழில் எழுதுவதற்கு, மிகவும் சிரமம் கொடுத்த வரிவடிவங்களென்றால் இ, ஐ, ஒ, ழ போன்றவற்றையும், உச்சரிப்பு வெளிப்பாட்டிற்கு,

ழகர ஒலி சீன மொழியான மண்டரீனிலும், சில மங்கோலிய மொழிகளிலுமிருப்பதாக அறிஞர்கள் கூறுகிறார்கள். இவற்றைப்போல் சில ஐரோப்பிய மொழிகளிலும் சில உயிரெழுத்துக்கள் சிறிய ஒலிபேதங்களுடன் இருப்பதையும் நாம் அவதானித்திருக்கிறோம். உதாரணமாக ஜேர்மனிய மொழியான டொச்சில் (Deutsch) ä, ö, ü போன்ற எழுத்துக்களைச் சுட்டலாம். இவைதவிர பிரெஞ்சுமொழிச் சொற்களில் வரும் சில எழுத்துக்கள் ஊமையாகவே இருந்துவிடுகின்றன.

இம்மூன்று ஒலிபேதங்களும், ஜேர்மானிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த ஆங்கிலத்தில் ''L'' ஒன்றினால் மட்டுமே பூர்த்தி செய்யப்படுகிறது. Tamil : தமி**ழ்**, Pillai : பி**ள்**ளை, – Mala : மா**லா**. தமிழ் பேசும் நாடுகளில் ''**ழ**'' விற்கு ''Zha'' பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் ஆங்கில மொழிபேசும் நாடுகளில், அதற்குரிய ஒலி உச்சரிக்கப்படுவதில்லை. இதுதவிர இலத்தீன் மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த பிரெஞ்சு, ஸ்பானிய மொழிகளில், அடுத்தடுத்துவரும் L L இற்கான ஓசை லகர ஒலிக்குப்பதிலாக மாறுபட்ட ஒலி எழுப்புவதையும் அவதானிக்கலாம். Mallorca : ம**யோ**க்கா (இது ஐரோப்பிய மக்களின் சுற்றுலாத்துறைக்கு மிகவும் பிரபல்யம் பெற்ற ஸ்பானியத்தீவுகளில் ஒன்று.) மேலும் இலத்தீன் மொழிக்குடும்பமானாலும் சரி, ஜேர்மானிய மொழிக்குடும்பமானாலும் சரி, அம்மொழிகளின் வரிவடிவங்கள் ஒன்றாகவிருந்த போதிலும் அவை ஒலிவடிவில் வேறுபட்டிருப்பதையும் காணலாம்.

விலங்கியல், தாவரவியல் துறைகளில் காணப்படும் உட்தொடர்பை வைத்து குடும்பங்களாக வகைப்படுத்துமாற்போல், மொழியியற்றுறையிலும் மொழிக்குடும்பங்களாக இனம்பிரிக்கப்பட்டுள்ளது. 1856இல், Robert Caldwell (1814-1891, இவர் வடஅயர்லாந்தைச் சேர்ந்த புரட்டஸ்தாந்து மதப்போதகர்.) எழுதிய திராவிட மொழியின் ஒப்பிலக்கணம் என்ற நூலில், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்ற பிரதான மொழிகளுக்கப்பால், துளு, கொடகு, தோத, கூய், கோந், ஓரான், ராஜ்மகால் எனப் பன்னிரண்டு மொழிகள் திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததென்கின்றார். ஆனால் தற்காலத்தில் இருபதிற்கும் மேற்பட்ட திராவிடமொழிகள் இனங்காணப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. அவை வடதிராவிடம், மத்தியதிராவிடம், தென்திராவிடமென மூன்று உபபிரிவுகளுக்குள் அடங்குவதாகக் கூறுகிறார்கள்.

அண்மையில் கேரள மாநிலத்தின், Wayanad மாவட்டத்திலுள்ள ambukuthi மலையிலுள்ள எடக்கல் குகையில் ஐந்தாவது தடவையாக தமிழ்ப்பிராமி சாசனம் (கல்வெட்டு) ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக இந்துப் பத்திரிகை தகவல் வெளியிட்டது. *சிறிவாழுமி* என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. வாழுமி என்பது பிரம்மன் என்ற சமஸ்கிருதச்சொல்லின் தமிழ்வடிவம். **மு** என்பது தமிழ்ப்பிராமி வரிவடிவம் என்றும், இது கி.மு 4ம் நூற்றாண்டைச் சேர்ந்ததென்றும், சாசனவியலாளர் (Epigraphist) ஐராவதம் மகாதேவன் கூறுகிறார். இந்த ஐந்தாவது சாசனம், சாசனவியல் பேராசிரியரான எம்.ஆர். ராகவவாரியாரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு முன்னர் இதேயிடத்தில் கி.மு 3 ஆம் நூற்றாண்டிற்குரிய நான்கு தமிழ்ப்பிராமி சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தமிழெழுத்து வடிவத்தின் தொன்மை தமிழ்ப்பிராமியே என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் இலங்கையிலும் 1500ற்கும் மேற்பட்ட பிராமிச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை பிராக்கிருத மொழியில் (சமஸ்கிருதத்தின் பேச்சுவழக்குமொழி என்று சொல்லலாம்). பௌத்தம் சார்ந்த செய்திகளைக் கூறுகின்றன.
பிராக்கிருதமொழியும் (பாளிமொழியும் இதுவும் ஒன்றாகக்கருதலாம்) இலங்கையில் இயக்கர்கள் பேசிவந்த திராவிட **எலு**மொழியும் இணைந்தே சிங்களமொழி தோற்றம் பெற்றது. தமிழ் எழுத்துவடிவம் தமிழ்ப்பிராமியிலிருந்து தோன்றியதாகும். இவ்வரிவடிவமே காலப்போக்கில் வட்டெழுத்துக்களாக உருமாறியது. இவ்வட்டெழுத்துமுறை கி.பி 6 இலிருந்து கி.பி 10 வரையிலான காலப்பகுதியில் தோற்றம் பெற்றது. இவ்வட்டெழுத்து முறையே தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், சிங்களம் போன்றவற்றிற்கு முன்னோடியாக இருந்தது என்று சொல்லப்படுகிறது.



**கேரளாவிலுள்ள பட்டாணத்தில் கண்டெடுக்கப்பட்ட தமிழ்ப்பிராமி எழுத்துக்கள்**

அசோகன் ஆட்சியுடனே (மௌரியப்பேரரசனான அசோகனின் ஆட்சிக்காலமானது கி.மு 273 – 232 வரை. இவனது ஆட்சிப்புலம் இந்தியாவின் பெரும்பகுதியையும், தென்னாசியா, ஆப்கானிஸ்தான் ஈரானின் சிலபகுதிகள், வங்காளம்,அசாம், மைசூர்வரை வியாபித்திருந்ததாகச் சொல்லப்படுகிறது). "**பிராமி**" என்ற வரிவடிவம், பாவனைக்கு வந்தமைக்கான சான்றுகளிருப்பதாகக் கூறுகிறார்கள். இதனால் இதனை **வடபிராமி** அல்லது **அசோகப்பிராமி** என்றும் அழைக்கின்றனர். இதே காலப்பகுதியில், இதே வரிவடிவங்கள் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டு வந்தாலும் அதிலிருந்து வேறுபட்ட தமிழுக்கேயுரித்தான இ, ம, ழ, ற, ன, ள எழுத்துக்கள் காணப்பட்டன. இதனால் இவற்றை **தமிழ்ப்பிராமி** அல்லது **திராவிடி** என்றழைக்கின்றனர். இலங்கையில் பூநகரியில், மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வின்போது கிடைக்கப்பெற்ற மட்பாண்டசாசனங்களில் **வேளீர்** என்ற தமிழ்நாட்டையொத்த வரிவடிவம் இருந்தமையால், பூநகரியில் கி.மு3ஆம் நூற்றாண்டில் தமிழ்மொழியும், தமிழ்வரி வடிவமும் இருந்தமைக்கு சான்றெனகிறார் ஐராவதம் மகாதேவன்.

வேளீர், ஆய் என்பன சங்ககாலத்தில் (கி.மு 3 – கி.பி 1 வரை) சிற்றரசர்களைக் குறிக்கும் பதங்களாகும். புறநானூற்றிலும், பதிற்றுப் பத்திலும் இப்பதங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இச்சொற்களையுடைய நாற்பதிற்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள், அநுராதபுரம், மகாகம, களனி, வவுனியா, பெரியபுளியங்குளம், திருமலை, மட்டக்களப்பு போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

யாழ்மாவட்டம் கந்தரோடையில் கி.பி 3 அல்லது 4ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த முத்திரைச்சாசனம் ஒன்றும் தொல்லியல் ஆய்வின்போது கிடைத்தது. அம்முத்திரையில் விஷ்ணு பூதிஸ்ய/விஷ்ணுபூதியினுடைய என தென்பிராமியில் காணப்பட்டது. அதே இடத்தில் கிடைக்கப்பெற்ற கறுப்பு, சிவப்பு மட்பாண்டத் துண்டொன்றில் தமிழ்ப்பிராமி வரிவடிவம் காணப்பட்டது. அந்தத் தட்டையான சட்டிவிளிம்பொன்றில் **குணி** என்று மிகவும் தெளிவாகக் காணப்பட்டது. இது பிக்குணி என்ற தமிழ்ப்பதத்தின் இறுதி எழுத்துக்களாக இருக்கலாமென்று சொ.கிருஸ்ணராஜா தெரிவித்திருந்தார். இது கி.பி 1, 2 நூற்றாண்டு தமிழ்நாட்டின் வரிவடிவத்தை ஒத்ததாகவிருந்தது. இதேபோல் ஆனைக்கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின்போது எலும்புக்கூடும், வெண்கலத்திலான முத்திரை ஒன்றும் கிடைத்தன. அதன்வாசகம், கோவேந்தன்/கோவேதன்/கோவதன் ஆகும்.

பொதுவாக இலங்கைப் பிராமிக்கல்வெட்டில் வரும் பருமக, வேள, ஆய, பரத, உதி போன்ற பெயர்கள் சங்க இலக்கியத்தில் வரும் பெருமகன், வேள், ஆய், பரதவர், உதியன் போன்றபெயர்களை ஒத்தவையெனச் சுட்டிக்காட்டுகின்றனர். சங்க இலக்கியத்தில் வந்த ஆய், வேள், பரதவர் போன்ற இனக்குழுக்கள் பெருங்கற்காலப் (கி.மு 1000 - 250) பண்பாட்டு வழிவந்தவர்களெனக் கூறப்படுகிறது.

*(இவ்வாக்கத்திற்கு செங்கையாழியான், புஸ்பரட்ணம் போன்றோரின் கட்டுரைகள் துணைபுரிந்தன.)* *

# வவுனிக்குளம் 585 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு – வன்னேரிக்குளத்தில் நன்னீர் மீன் வளர்ப்பு ஆரம்பம்

**போர்** காரணமாக கடந்த பல ஆண்டுகளாக புனரமைப்பு வேலைகள் எதுவுமின்றி அழிவு நிலையில் இருந்த முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வவுனிக்குளம், இப்பொழுது வேகமாகப் புனரமைக்கப்பட்டு வருகிறது. இதற்காக அரசாங்கம் 585 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த நிதியில் முதற்கட்டமாக 240 மில்லியன் ரூபா செலவில் குளத்தின் உள்ளகப் புனரமைப்புப் பணிகள் கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மிகுதி நிதியின் மூலம் குளத்தின் இடது – வலது பிரதான வாய்க்கால்கள், சிறு வாய்க்கால்கள் என்பன புனரமைக்கப்படும்.

வன்னிப் பிரதேசத்திலுள்ள குடியேற்றத் திட்டங்களுக்கு நீர்ப்பாய்ச்சப் பயன்படுத்தப்படும் பிரதான குளங்களில் வவுனிக்குளமும் ஒன்றாகும். இந்தக் குளத்தின் கீழ் மல்லாவி, யோகபுரம், துணக்காய், ஒட்டன்குளம், செல்வபுரம் போன்ற குடியேற்றத்திட்டக் கிராமங்களைச் சேர்ந்த 6897 ஏக்கர் வயல்கள் நீர்ப்பாய்ச்சப்பட்டு வந்தன. குளம் சீரமைக்கப்படாமல் இருந்ததால், தற்பொழுது 4500 ஏக்கரே இந்தக் குளத்தின் மூலம் செய்கை பண்ணப்படுகிறது. குளம் புனரமைக்கப்பட்டதும் முழு அளவில் விவசாயம் செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளையில், இதே மாவட்டத்திலுள்ள வன்னேரிக்குளத்தில் நன்னீர் மீன் உற்பத்தியைப் பெருக்கி இந்தப் பகுதி மக்களின் மீன் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யுமுகமாக, அண்மையில் இக்குளத்தில் இரண்டு இலட்சத்து நாற்பதினாயிரம் வரையிலான சிறந்த ரக மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன. இந்த நன்னீர் மீன் வளர்ப்புக்கு உலக உணவு விவசாய நிறுவனமும், இலங்கை தேசிய நன்னீர் மீன் வளர்ப்பு அதிகார சபையும் அனுசரணை வழங்கியுள்ளன.

16ம் பக்கத்தொடர்ச்சி…

உணர்வைக் கணக்கில் எடுக்காமல் இடதுசாரிகள் தவறு செய்கிறார்களா?


பதில்: “தமிழ்த் தேசிய அரசியல் தமிழ்நாட்டில் எடுபடாது என்பதுதான் என் கருத்து ‘தமிழ்த் தேசிய இனம் இந்திய அரசால் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படுகிறது’ என்ற உணர்வு தமிழகத்தில் உருவானால்தான், தமிழ்த் தேசிய அரசியல் எடுபடும். ஆனால், இந்தியாவில் தமிழ்த் தேசிய இனம் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படவில்லை.”

கேள்வி: “ஈழத்தில் லட்சக்கணக்கான தமிழர்கள் படுகொலையையும் தமிழக மீனவர்கள் படுகொலையையும் இந்திய அரசு கண்டு கொள்ளாதது புறக்கணிப்புகள் இல்லையா?”

பதில்: “அதை 100 சதவிகிதப் புறக்கணிப்பு என்று சொல்ல முடியாது. இந்திய அரசின் வர்க்க நலன் சார்ந்ததுதான் இலங்கைப் பிரச்சினையில் அதன் நிலைப்பாடு. பொருளாதாரரீதியாகத் தமிழினம் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படவில்லையே? அப்படிப் புறக்கணிக்கப்பட்டால்தான், தமிழ்த் தேசிய அரசியலுக்கான வாய்ப்புகள் உருவாகும்.”
*

# இலங்கைத் தமிழர்கள் மீதான தமிழக அரசியல்வாதிகள் தொண்டுள்ள 'தொப்புள் கொடி உறவு' கொடிகட்டிப் பறக்கிறது!

– சேவற்கொடியோன் –




இலங்கையில் போர் முடிவுற்ற பின்னர், தமிழர் பிரதேசங்களில் நடைபெற்று வரும் மீள்குடியேற்ற, புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை நேரடியாகப் பார்வையிட்டு, யதார்த்தபூர்வமான நிலைமைகளை தெரிந்து கொள்வதற்காக இலங்கை சென்ற இந்தியப் நாடாளுமன்றக் குழுவில் இடம் பெற்றிருந்த தமது பிரதிநிதிகளை தமிழகத்தின் அ.இ.அ.தி.மு.க, தி.மு.க. கட்சிகள் விலக்கிக் கொண்டுள்ளன. ஜெனீவாவில் மனித உரிமைப் பேரவையின் 19வது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களித்த பின்னர், இந்தத் தூதுக்குழு அங்கு சென்றதால், இலங்கைத் தமிழ் மக்களிடமும், அவர்களது 'தொப்புள் கொடி உறவுகளான' தமிழக மக்களிடமும் ஏகப்பட்ட எதிர்பார்ப்புகள் இருந்தன.

இந்திய நாடாளுமன்றக் குழுவின் இலங்கை வருகையால் சில நன்மைகளாவது விளையுமென்றபடியால்தான், புலிகளுக்கு தொடர்ச்சியாக ஆதரவு தெரிவித்து வரும் வை.கோபாலசாமின் ம.தி.மு.கவும், தொல்.திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் டி.ராஜாவும் தம்மையும் அதில் இணைத்துக்கொள்ளும்படி வேண்டுகொள்கள் விடுத்து, வாய்ப்புக் கிடைக்காமல் இருந்தனர். இந்த நிலைமையில் தமிழகத்தின் பிரதான கட்சிகளான அ.இ.அ.தி.முகவும், தி.மு.கவும் இலங்கைப் பயணத்திலிருந்து தமது பிரதிநிதிகளை திடீரென விலக்கியமை, அவர்களது பொறுப்பற்றதும் பொறுக்கித்தனமானதும் செயல் என்றுதான் அனைத்துத் தரப்பினராலும் பார்க்கப்படுகிறது.

முதலில் இலங்கை செல்வதற்கு ஒப்புக்கொண்ட இந்த இரண்டு கட்சிகளும், பொருத்தமான காரணங்கள் எதுவும் கூறாமல் பிரதிநிதிகளை விலக்கிக் கொண்டமை, அவர்கள் இலங்கைத் தமிழ் மக்களில் உண்மையில் அக்கறையில்லை என்பதையே தோலுரித்துக் காட்டியுள்ளது. ஜெயலலிதா சொன்ன காரணம், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைச் சந்திப்பதற்கு தூதுக்குழுவுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்பதாகும். இது அப்பட்டமான பொய். தூதுக்குழு சகல தரப்பினரையும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்பதே உண்மையாகும்.

கருணாநிதியின் முடிவு இன்னும் கேலிக்கூத்தானது. அவர் காரணம் எதுவும் சொல்லாமலே, தனது கட்சியின் பிரதிநிதிகள் தூதுக்குழுவில் செல்லவில்லை என்று மட்டும் அறிவித்துள்ளார். அவருக்கும் ஜெயலலிதா சொன்னது போன்ற காரணங்கள் எதுவும் இருக்குமானால், ஜெயலலிதா அறிவிக்கும் வரை காத்திருக்காமல் முன்னரே அறிவித்திருக்கலாமே? இதிலிருந்து தெரிவது என்னவென்றால், ஜெயலலிதாவும் கருணாநிதியும் ஒருவரை ஒருவர் பார்த்தே அரசியல் சூதாட்டம் நடாத்துகிறார்கள் என்பதாகும். ஜெயலலிதா விலகி நிற்க, தனது கட்சி தூதுக்குழுவில் பங்கேற்றால், நாளை ஜெயலலிதா தன்னைத் 'தமிழினத் துரோகி' என்று வசைபாடுவார் என்ற பயம்தான் கருணாநிதியை இந்த முடிவை எடுக்கத் தூண்டியிருக்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

அப்படியானால், இலங்கையில் போர் முடிவுற்ற பின்னர் அங்கு சென்ற தூதுக்குழுவில் தனது செல்ல மகள் கனிமொழியை ஏன் அனுமதித்தார் என்ற கேள்வி எழும்புகிறது. எது சரி எது பிழை என்று அரசியல் செய்வதை விடுத்து, ஜெயலலிதா என்ன செய்கிறார் என்று பார்த்து அவருக்கு ஏட்டிக்குப் போட்டியாக அரசியல் செய்வதானால், நாளை இலங்கைத் தமிழர்களுக்கு தனி ஈழம் அமைத்துக் கொடுப்பேன் என ஜெயலலிதா சொன்னால், பதிலுக்கு இலங்கை முழுவதையும் தமிழ் ஈழம் ஆக்குவேன் என கருணாநிதி பதிலுக்குச் சொல்வாரோ தெரியவில்லை!

இதே தலைவர்கள்தான் கடந்த காலங்களில் இலங்கைத் தமிழர்கள் அங்குள்ள சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அரசாங்கங்களினால் துன்புறுத்தப்படுவதாகவும், அவர்களது வாழ்வாதார உரிமைகள் மறுக்கப்படுவதாகவும் தொடர்ந்து பிரச்சாரம் மேற்கொண்டு வந்தனர். அதன் அடிப்படையில் பார்த்தால், தற்போது இலங்கை அரசு விடுத்த அழைப்பை ஏற்று அங்கு சென்று நிலைமைகளை நேரில் ஆராய்ந்து, அங்கு தமிழர்களுக்கு ஏதாவது பாரபட்சம்

காட்டப்பட்டால், அதை இலங்கை அரசிடம் இடித்துரைப்பதுடன், உலகிற்கும் அறிவித்திருக்க வேண்டும். அதைவிடுத்து அழைப்பை நொண்டிக் காரணங்கள் கூறி நிராகரிப்பதானது, அவர்களுடைய கபட நோக்கத்தையே வெளிப்படுத்துகிறது.

இதிலிருந்து தெரிவது என்ன? தமிழக அரசியல் கட்சிகள் தமது மக்களுக்கு தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் எவ்வளவோ இருக்க, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தூக்கிப் பிடிப்பது, தமது அரசியல் ஆதாயங்களுக்கேயொழிய வேறு எதற்காகவும் இல்லை என்பதைத்தான். இதன் மூலம் அவர்கள் தமிழக மக்களையும் இலங்கைத் தமிழர்களையும் ஒருசேர ஏமாற்றுவதுடன், இந்தப் பிரச்சினைகளில் அனுதாப உணர்வை ஏற்படுத்த வேண்டிய சிங்கள மக்களையும் வெறுப்பேற்றுகிறார்கள். இவர்களையிட்டு அனைத்து மக்களும் - குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஜெயலலிதாவைப் பொறுத்தவரை, அவரது தற்போதைய அரசியல் கடந்த காலங்களைப் போன்றதல்ல. முன்பு அவர் புலிகளைக் கடுமையாக எதிர்த்துக்கொண்டு, இலங்கைத் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றி வைக்கப்பட வேண்டும் என்ற சரியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அதேநிலைப்பாட்டையே (இன்றும் கூட) அவரது நெருங்கிய நண்பரும் ஆலோசகருமான 'துக்ளக்' சோவும், சுப்பிரமணிய சுவாமி போன்றோரும் கொண்டிருந்தனர். இப்பொழுது ஜெயலலிதா அதிலிருந்து பல்டி அடித்துள்ளார் என்பதையே அவரது நடவடிக்கைகள் காட்டுகிறது.

உள்நாட்டு அரசியலில் கூட அவர் இந்துத்துவ வலதுசாரி அரசியல்வாதியான குஜராத் முதல்வர் நரேந்திர மோடியுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளார். இந்த இருவரில் ஒருவரே பிரதான எதிர்க்கட்சி சார்பில் இந்தியாவின் பிரதமர் பதவிக்கு நிறுத்தப்பட வேண்டும் என்ற கருத்து, இந்திய வலதுசாரிகளிடம் மட்டுமல்லாமல், மேற்கத்திய சக்திகளிடமும் புதிதாக ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. அதேநேரத்தில் இலங்கைப் பிரச்சினையிலும் அவர் முன்னைய நிலைப்பாட்டை மாற்றி, புலிகளை எதிர்ப்பதைக் காட்டிலும் இலங்கை அரசை எதிர்ப்பதிலேயே தீவிரமாக உள்ளார். அவரது இந்த நிலை மாற்றம், புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தம் முடிவடையும் தருவாயில், புலித் தலைமையைக் காப்பாற்ற மேற்கத்தைய சக்திகள் முயற்சி செய்து, அது தோல்வியில் முடிந்ததும் எப்பொழுது அவை இலங்கை அரசுக்கு எதிரான காய் நகர்த்தல்களை ஆரம்பித்தனவோ, அப்போதுதான் ஜெயலலிதாவிடமும் ஏற்பட்டது.

எனவே ஜெயலலிதாவின் தற்தோதைய இலங்கை பற்றிய நிலைப்பாடும், மேற்குலகின் நிலைப்பாடும் இப்பொழுது ஒரே நேர்கோட்டில் சமாந்திரமாகச் செல்கின்றன. அதன் வெளிப்பாடுதான், இந்தியாவுக்கு கடந்த வருடம் பயணம் மேற்கொண்ட அமெரிக்க இராஜாங்க செயலாளர் கிலாரி கிளின்ரன், சென்னைக்கு விசேட பயணம் மேற்கொண்டு, ஜெயலலிதாவை ஆரத்தழுவிய நிகழ்ச்சி என எண்ணுவதற்கு இடமுண்டு. தொடர்ந்து ஜெயலலிதா மேற்கின் நிகழ்ச்சி நிரலுடன் இணைந்து வேலை செய்வதற்கான வாய்ப்புகளே அதிகம் காணப்படுகிறது.

தமிழக அரசியல்வாதிகள் எடுத்துள்ள இந்த அபாயகரமான நிலைப்பாடு, இப்போதைக்கு இலங்கை அரசுக்கு எதிரானது போலத் தோன்றினாலும், அது எதிர்காலத்தில் தமிழக மக்களினதும், முழு இந்திய மக்களினதும் வாழ்க்கைக்கும், இந்தியாவின் தேசிய நலன்களுக்கும் ஆபத்தானதாகவே அமையப் போகின்றது. முன்பு இந்தியாவுக்கு வடக்கிலிருந்து 'எல்லை தாண்டிய பயங்கரவாதம்' சவாலாக இருக்கிறது எனக் கூறப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது தமிழக அரசியல்வாதிகளின் தேசத்துரோக நடவடிக்கைகளால், இந்தியாவின் தெற்கில், அதன் எல்லைக்குள்ளாகவே அந்நிய சக்திகளின் ஊடுருவலுக்கான ஆபத்து ஆரம்பித்து இருப்பதையே திராவிடக் கட்சிகளின் தற்போதைய அரசியல் எடுத்தியம்புகிறது. *

---

10ம் பக்கத்தொடர்ச்சி...

'விழிப்பு' கவிதையில் கேட்கும் கவிஞர், பதிப்புரையில் கூறப்பட்ட உண்மையை நிலை நிறுத்தும் கவிஞர் வரிசையில் தன்னை தக்க வைத்துக்கொள்ளத் தொடர்ந்தும் எழுத வேண்டும்.

ஆனாலும் ஒரு எச்சரிக்கை. "நீ வெட்டி வெட்டிப் போடும் நகத்திலெல்லாம் ஒரு குட்டிக் குட்டி நிலவு தெரியுது" என்பது போன்ற உவமான உவமேயங்களை மண்டையைப் பிசைந்து வெளிக்கொணரும் கவிஞர்களும், அதை மாய்ந்து மாய்ந்து ரசிக்கும் ரசிகர்களும் உள்ள தமிழ் கூறும் நல்லுலகில், சமூகப் பிரக்ஞையுடன் கவிதை படைக்க வேண்டுமாயின், அதற்குரிய வரலாற்றுப் பாரம்பரியத்துடன் இணைந்து முயற்சித்தாலன்றிச் சாத்தியமில்லை.

(கவிஞர் சுமதி குகதாசன், காலஞ்சென்ற கம்யூனிஸ்ட் மு.கார்த்திகேசன் அவர்களின் இளைய புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது)
*


2012 மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெற்று முடிந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தொடரில், அமெரிக்கா இலங்கைக்கு எதிராகக் கொண்டு வந்த தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்த பின்னர், இலங்கை – இந்திய உறவுகளில் ஒரு நெருடலான நிலை ஏற்பட்டிருப்பது வெளிப்படையான உண்மையாகும். இலங்கை அரசாங்கம் மட்டுமின்றி, இலங்கையின் தேசப்பற்றுள்ள மக்கள் அனைவருமே இந்தியத் 'துரோகத்தின்' மீது கடுமையான கோபம் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. மறுபக்கத்தில் இந்தியாவின் செயற்பாட்டை அந்நாட்டு மத்திய அமைச்சர்கள் சிலர் அவ்வப்பொது நியாயப்படுத்தினாலும், இந்திய அரசும் தனது செயல்பாடு குறித்து 'வளைந்து நெளிவது' தெரிகிறது.

பனிப்போருக்குப் பின்னர் உலக அரங்கில் அமெரிக்கா முன்னகர்த்தி வந்த ஒற்றை வல்லரசுக் கொள்கையை, ரஸ்ய – சீன எழுதப்படாத தந்திரோயக் கூட்டு தடுத்தி நிறுத்திவிட்டது ஓரளவு உண்மையேயாயினும், இந்தியாவையும் அக்கூட்டில் இணைத்துவிட அந்த இரு நாடுகளும் முயன்றும் வந்துள்ளன. அதற்காக சீனா, இந்தியாவுடனான தனது கடந்தகால கசப்புகளை ஒருபக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு விட்டுக்கொடுப்புடன் செயல்பட்டு வந்ததையும் பிராந்திய நிலவரங்களை உற்று நோக்கி வந்தோர் நன்கறிவர். ஆனால் தற்போது இலங்கைப் பிரச்சினையில் இந்தியா எடுத்த நிலைப்பாடு, அதில் ஒரு பின்னடைவை ஏற்படுத்திவிட்டது எனக் கருத இடமுண்டு.

ஆசியாவில் இன்று பலமான சக்தியாக வளர்ந்துவிட்டது மட்டுமின்றி, உலக அரங்கில் அமெரிக்காவுக்கு இந்தத் தசாப்த முடிவுக்குள்

# இலங்கைக்கு எதிரான இந்திய நகர்வின் பின்னணி!

*- தேவ் ஆனந்த் -*




மறுபக்கத்தில், இந்த விடயத்தில் இந்தியாவின் 'எதிரி' நாடான சீனா இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தமை, இலங்கையர்கள் மத்தியில் மேலும் ஒரு கருத்துத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதுமாத்திரமின்றி, அமெரிக்க – சோவியத் பனிப்போர் முடிவதற்கு முன்னர் இந்தியாவின் நெருங்கிய நட்பு நாடாக விளங்கிய சோவியத் யூனியன், இன்று ரஸ்யாவாக மாறிவிட்ட பின்னரும்கூட, இலங்கைக்கு ஆதரவாகவே தனது வாக்கைப் பதிவு செய்துள்ளது.

சவாலாகவும் மாறிவிடக்கூடிய நிலையில் இருக்கும் சீனாவை, அரசியல் – இராணுவ ரீதியாகச் சுற்றி வளைக்கும் ஒரு நகர்வை கடந்த சில ஆண்டுகளாக அமெரிக்கா செய்து வருகிறது. அதற்காக சீனாவுடன் அதன் அண்டை நாடுகளுக்கு இருக்கும் சின்னச் சின்ன முரண்பாடுகளைக்கூட அது தவறாது பயன்படுத்துகிறது. அமெரிக்காவின் இந்த முயற்சியில் அது இந்தியாவை தனது பிரதான தந்திரோபாயக் கூட்டாளியாகக் கருதுகிறது.

அதற்காக அது தனது நீண்ட நாளைய நட்பு நாடான பாகிஸ்தானைக்கூட 'கைவிட்டு' விட்டது. (இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான கார்க்கில் போரின் போது இது முதலாவதாக வெளிப்பட்டது)

தற்போது உருவாகியுள்ள இந்தச் சூழ்நிலையிலிருந்து சற்றுப் பின்நோக்கிப் பார்க்கின்ற போது, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் சில ஆயிரம் ஆண்டுகள் கால புவியியல் – சரித்திர – கலாச்சார தொடர்புகள் இருந்து வருகின்ற போதிலும், அரசியல் ரீதியிலான உறவுகள் அவ்வளவு சிறப்பானவை என்று சொல்லிவிட முடியாது. இலங்கையிலும் இந்தியாவிலும் மன்னராட்சிகள் நிலவிய காலத்தில், பரஸ்பர படை உதவிகள் இருந்து வந்த போதிலும், பாண்டிய நாட்டு இளவரசிகள் சிலரை சிங்கள மன்னர்கள் மணமுடித்திருந்த போதிலும், சிங்கள மக்கள் இன்றும் கொண்டாடும் கண்டி இராசதானியின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் ( இயற்பெயர் கண்ணுச்சாமி) தமிழ் மன்னன் என்ற போதிலும், வரலாற்றிலும் சிங்கள மக்கள் மனங்களிலும் எஞ்சியிருப்பது, இந்திய மன்னர்களின் படையெடுப்புகளும், அதனால் ஏற்பட்ட அச்சம் மற்றும் கசப்புணர்வுகள் மட்டுமே.

இந்தப் பின்னணியில், சுதந்திர இந்தியாவினதும் இலங்கையினதும் உறவுகள்கூட, ஒப்புக்கு கொண்டாடப்பட்டவையாகவே இருந்து வந்துள்ளன. இந்த விடயத்தில், சிங்களத் தேசியவாதத்தின் குறியீடாகப் பார்க்கப்படும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியை விட, மேற்கத்தைய சார்பு ஐக்கிய தேசியக் கட்சியே உண்மையில் இந்திய விரோதத்தைத் தூக்கிப்பிடித்த கட்சியாகும். தென்னாசியாவில் இந்திய எல்லையிலுள்ள சில நாடுகள் இந்திய விரோத நிலைப்பாட்டைக் கொண்டுள்ளமைக்கு, இந்தியாவின் தேச விஸ்தரிப்புக் கொள்கையே பிரதான காரணமாகும். ஆனால் இலங்கையின் ஐ.தே.கவின் இந்திய விரோத நிலைப்பாட்டுக்கு, அக்கட்சி சுதந்திர இந்தியாவின் ஆரம்பகால ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டுக்கு எதிராகக் கொண்டிருந்த ஏகாதிபத்திய அடிவருடிக் கொள்கையே காரணமாகும்.

அதன் தொடர்ச்சியாகவே, 'அமெரிக்க யங்கி டிக்கி' என இலங்கையில் வர்ணிக்கப்பட்டு வந்த ஐ.தே.கவின் அபகீர்த்திமிக்க ஜே.ஆர்.ஜெயவர்த்தன 1977ல் ஆட்சிக்கு வந்ததும், இந்தியாவுக்கு உசுப்பேத்தும் அமெரிக்க சார்பு கொள்கைகளை முன்னெடுக்க முற்பட்டு, அதன் விளைவாக இந்திராகாந்தி தலைமையிலான இந்திய அரசாங்கம் அதற்குப் பதிலடியாக, தமிழ் இளைஞர்களை ஆயுதபாணிகளாக்கி இலங்கையின் உள்நாட்டுப் போரைத் தொடக்கி வைக்கும் சூழல் உருவானது. அதன் பாரதூரமான விளைவுகளை இலங்கை 30 வருடங்களாக அனுபவித்து வர, இந்தியா கைகட்டி வேடிக்கை பார்த்து ரசித்தது நடந்தது. கடைசியில் வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது போல, புலிகள் இந்தியாவின் அடிமடியில் (ராஜீவ் கொலை உட்பட) கைவைத்த பின்னரே இந்தியா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர உதவ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

ஆனால் போர் முடிவுற்ற பின்னர், இலங்கை தன்வழி பயணிக்க எத்தனித்த போது, அதை இந்தியாவால் சீரணிக்க முடியாத ஒரு நிலை உருவானது. குறிப்பாக, தென்னாசியப் பிராந்தியத்தில் இந்திய வல்லாதிக்கத்தை கேள்விக்குள்படுத்தும் சீன, பாகிஸ்தானிய உறவுகளை இலங்கை நாடியது இந்தியாவின் கோபத்தை அதிகப்படுத்தியது. இந்தகைய ஒரு பின்னணியில்தான் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்ததை விளங்கிக்கொள்ள வேண்டும்.

இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தமை வரலாற்றின் பக்கங்களில் மட்டுமின்றி, இலங்கை மக்களின் – குறிப்பாக சிங்கள மக்களின் மனங்களிலும் என்றென்றைக்குமாக இருக்கப் போகின்றது. இது பழைய இந்திய மன்னர்களின் இலங்கை மீதான படையெடுப்புகள் போல, இலங்கையர்களால் அடுத்த பல நூற்றாண்டுகளுக்கு நினைவுகூரப்படப் போகிறது. இந்தியா ஏன் இந்த முட்டாள்தனமான காரியத்தைத் தனது அண்டை நாட்டுக்கு எதிராகச் செய்தது என்பதை, 'யானை பார்த்த குருடர்கள் போல' பலரும் ஆராய்ந்து வருகின்ற போதிலும், இந்தியா இலங்கையைப் பொறுத்தவரை ஆபத்து வேளைகளில் உதவக்கூடிய நண்பன் எனச் சிலர் மனங்களில் இருந்த கருத்து அடிபட்டுப் போய்விட்டதே உண்மையாகும்.

சிலரின் கருத்துப்படி, தமிழக அரசியல் கட்சிகளின் ஏகோபித்த நெருக்குதல்தான் இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களிக்கக் காரணம் எனக் கூறப்படுகிறது. இன்னும் சிலர் மன்மோகன் சிங் – சோனியா காந்தி கோஸ்டி அமெரிக்க சார்பானவர்கள் என்றபடியால், அந்த விசுவாசத்தின் காரணமாகவே அமெரிக்கா இலங்கைக்கு எதிராகக் கொண்டுவந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது என்கின்றனர். வேறு சிலர் இலங்கையின் இன்றைய அரசாங்கம் சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் நெருங்கிச் செல்வதால், அதற்கு ஒரு பாடம் படிப்பிக்கவே இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களித்தது எனக் கூறுகின்றனர். அபூர்வமாக ஒரு சிலர், இலங்கைத் தமிழர்கள் மீது இந்தியா கொண்டுள்ள மெய்யான அக்கறை காரணமாகவே, தமிழர்களுக்கு நன்மைகள் எதுவும் செய்யாத ராஜபக்சவுக்கு ஒரு பாடம் படிப்பிக்கவே இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களனித்தது என்கின்றனர்.

இந்தக் காரணங்கள் ஒவ்வொன்றும் சில காரண காரிய அடிப்படையில் நியாயமாகவும் இருக்கலாம். ஆனால் இந்தியாவின் பிரசித்தி பெற்ற அரசியல் ஆய்வாளர்களே இதில் எது உண்மை அல்லது எல்லாமே உண்மைதானா என்பதைத் தீர்மானிப்பதில், இன்னமும் ஒரு முடிவுக்கு வராமல் திண்டாடுவதையும் காண முடிகிறது.

ஆனால் இன்றைய சர்வதேச நிலவரமே இந்தியாவின் இந்தச் செயற்பாட்டுக்கும், அதன் மற்றைய ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் காரணம் என்பதை மனதில் கொள்வது அவசியம். அதன்படி பார்த்தால், இன்றைய கொந்தளிப்பான உலகில், இந்தியா ஒரு சார்பு நிலையை எடுக்க வேண்டிய நிலையில் இருப்பதே அதன் செயல்களுக்கான காரணம். முதலாம் உலகப்போர் 20ம் நூற்றாண்டின் இரண்டாவது தசாப்தத்தில் நடைபெற்றது. அது ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையில் போட்டி காரணமாக நடந்தது. அந்தக் காலகட்டத்திலேயே சோவியத் புரட்சி நடைபெற்று உலகின் முதலாவது சோசலிச நாடு உருவானது. அதன் மூலம் உலக ஏகாதிபத்திய முகாம் ரஸ்யாவை இழந்தது.

இரண்டாம் உலகப்போர் அதன் பின்னர் சுமார் 24 ஆண்டுகள் கழித்து நான்காவது தசாப்தத்தில் நடந்தது. அப்பொழுது பலமான சோசலிச சோவியத் யூனியன் உருவாகியிருந்தது. அதை அழிக்கவே ஹிட்லர் தலைமையில் ஏகாதிபத்திய சக்திகள் திட்டமிட்டன. ஆனால் ஹிட்லரின் பேராசையால் போரின் போக்கு திசைமாறி, சோவியத் தலைமையிலான நேசப் படைகளால் ஹிட்லர் அழிக்கப்பட்டது மட்டுமின்றி, அந்தப்போரின் விளைவாக சீனாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் பல சோசலிச அரசுகளும் உருவாகின. ஆதனால் ஏகாதிபத்திய முகாம் மேலும் பலவீனமடைந்தது.

இரண்டு உலகப் போர்களின் பின்னர், ஏகாதிபத்தியம் பலவீனமடைந்த காரணத்தமாலும், சோசலிச முகாம் பலமாக இருந்த காரணத்தாலும், கடந்த 67 வருடங்களாக ஏகாதிபத்திய நாடுகள் உலகப் போர் ஒன்றைத் தொடக்க முடியாத நிலையில் இருந்து வந்தன. ஆனால் சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் முதலாளித்துவ மீட்சி ஏற்பட்ட பின்னர், அவை உலகைப் பங்கு போடும் தமது பேராசையை மீண்டும் புதுப்பிக்கத் தொடங்கியுள்ளன. அதற்கு இன்னொரு காரணம், முதலாளித்துவ உலகம் முன்னொருபோதும் கண்டிராத பொருளாதார – சமூக நெருக்கடியைச் சந்தித்தமையாகும். அந்த நெருக்கடி முதலாளித்துவ நாடுகளில் ஒரு சமூக மாற்றத்திற்கு இட்டுச் செல்லலாம் என ஏகாதிபத்தியம் அஞ்சுவதால், தனக்கு எதிரான நாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்புகளை ஆரம்பித்துள்ளது.

இந்த ஆட்சிக் கவிழ்ப்புகளை ரஸ்யா அல்லது சீனாவுக்கு மிகவும் வேண்டிய நாடுகளில் அரங்கேற்ற முற்படுகையில், நிச்சயமாக அது உலகப் போராக மாறக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. இந்தச் சூழ்நிலையில் ரஸ்ய – சீன – இந்திய அச்சு ஒன்று உருவாகாமல் தடுப்பதில் ஏகாதிபத்திய சக்திகள் அக்கறையாக இருக்கின்றன. அதற்காகவே திட்டமிட்ட முறையில் உலக ஆதிக்க சக்திகள் இந்தியாவை அந்த அணியிலிருந்து படிப்படியாக கடந்த சில வருடங்களாக விலக்கி வந்தன. இந்தியாவுடனான அமெரிக்காவின் அணுசக்தி ஒப்பந்தமும், பொருளாதார ஒத்துழைப்பின் அதிகரிப்பும், கூட்டு இராணுவப் பயிற்சிகளும் அதன் வெளிப்பாடே. அந்தச் செயற்பாடுகளின் ஒரு தொடர்ச்சியே, இந்தியா ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக வாக்களித்த நிகழ்வாகும். அது தவிர, இலங்கை அரசை 1987ல் இந்தியா மிரட்டி அடிபணிய வைத்தது போல, போருக்குப் பிந்தைய இன்றைய சூழலிலும் இலங்கையை மறைமுகமாக மிரட்டி அடிபணிய வைக்கவேண்டிய ஒரு தேவையும் இந்தியாவுக்கு இருந்தது.

இருப்பினும், இந்தியா இலங்கைக்கு எதிராக மேற்கொண்ட இந்த நடவடிக்கையை, இலங்கை அரசும் தேசப்பற்றுள்ள இலங்கை மக்களும் ஏற்கவில்லை என்பதை ஓரளவுக்கு இந்தியாவுக்கு தெளிவுபடுத்தியாயிற்று. இந்தியா ஏற்கனவே தனது தரை வழி எல்லை நாடுகளான சீனா, பாகிஸ்தான், நேபாளம், பர்மா. ஆப்கானிஸ்தான் என எல்லாவற்றுடனும் பகைமையுடன் தான் வாழுகிறது. இப்பொழுது தரைத் தொடர்புகள் எதுவுமற்ற இலங்கையுடனும் அது பிரச்சினைகளை உருவாக்கி வைத்துள்ளது. இந்த நிலைமை இந்தியாவின் வருங்கால வளர்ச்சிக்கு நல்லதல்ல.

இலங்கையைப் பொறுத்தவரை, இந்தியத் 'துரோகம்' அதன் மனதில் ஒரு ஆழமான வடுவை மட்டுமின்றி, மிகப் பெறுமதியான படிப்பினையொன்றையும் வழங்கியுள்ளது. 2500 ஆண்டுகளாக இந்தியப் படையெடுப்புகள் உட்பட, எல்லாவகையான அந்நிய ஆதிக்கங்களையும் வெற்றிகரமாக முறியடித்து வந்த இலங்கை மக்கள், வருங்காலத்திலும் தமது உயிரினும் மேலான தேசிய சுதந்திரத்தை, எந்த ஆதிக்க சக்திக்கும் தாரை வார்க்கமாட்டார்கள் என்பதை நிச்சயமாக வரலாறு நிரூபித்தே தீரும்.

## எழுத்தாளர் சண்முகம் சிவலிங்கம் மரணம்

**கவிஞரும், சிறுகதை எழுத்தாளரும், இலங்கை தமிழ் இலக்கியத்துறையில் நன்கு அறியப்பட்டவருமான ஸ்டீபன் மாஸ்டர் அல்லது சசி என அழைக்கப்படும் சண்முகம் சிவலிங்கம் 20.04.2012 இல் திடீரென மாரடைப்பினால் மரணமான செய்தி நம்மை வந்தடைந்துள்ளது. ஆக்காண்டி என்ற நாட்டார் பாடலை வைத்து இவரால் எழுதப்பட்ட கவிதை ஒர் உன்னதமான இலக்கியப்படைப்பு. இவருக்கு எமது அஞ்சலியை தெரிவித்துக்கொள்கிறோம். - ஆசிரியர்குழு**

# "தளிர்களின் சுமைகள்"

## — கவிதை நூல் அறிமுகம்

**- சாமி**

இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றத்தின் இருபத்தைந்தாவது வெளியீடாக சுமதி குகதாசன் அவர்களின் "தளிர்களின் சுமைகள்" கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது. சுமதியின் கன்னிப் படைப்பாக இந்நூல் இருக்கின்ற போதும், "நமக்குத் தொழில் கவிதை – நாட்டுக்குழைத்தல் – இமைப்பொழுதும் சோராதிருத்தல்" என்ற இலட்சிய வாரிசுகளில் ஒருவராக அவரை அடையாளப்படுத்தியுள்ளது.

ஒரு ஆசிரியராய் மாணவர்களோடு உறவாடி உளமறிந்து வாழ்ந்தவர் என்ற வகையில், தலைப்புக் கவிதை மற்றும் 'தண்டனை', 'பட்டம்' போன்ற கவிதைகள், தமிழர்களின் சுமைகளை உலகறியச் செய்கின்றன. ஆயினும் மாணவர்களோடு நின்றுவிடாது, தன் மனத் தாக்கங்களையும், தன் மனம் தேடும் நியாயங்களையும், சமூகத்தின் பல்வேறு தளங்களிலும் நின்று வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

"வர்க்க பேதம் என்பது
பச்சை மண்ணும்
சுட்ட மண்ணும்
பல தசாப்தம் ஆகியும்
மனமும் ஒன்றவில்லை
மன வருத்தமும் தீரவில்லை...." என்று
'யதார்த்தம்' என்னும் தலைப்பில் சொல்லும் கவிஞர், 'நிம்மதி' என்ற தலைப்பில்
"மாற்று வழிகளுடன்
நம் வாழ்க்கையை
எதிர்கொள்ளத்
தயாராயிருத்தலே
நிஜமான
வாழ்வு" என்கின்றார்.

நீர்வை பொன்னையன் அவர்களின் பதிப்புரை, கலாபூசண கவிஞர் ஏ.இக்பால் அவர்களின் முன்னுரை, எம்.குமாரசாமி அவர்களின் வாழ்த்துரை ஆகியவற்றுடன் வெளிவந்திருக்கும் இந்நூலில் கவிஞர் தன்னுரையில்,
"....சொல்லுருவம் எனதெனினும்
மனவோட்டம் பொதுவதுவே
என்மனமும் தம் மனமும்
எங்கேயோ எப்போதோ
உள்ளுக்குள் இசைவுபடும்..." என்று சொல்வதை உண்மையாக்கி வாசகர்களுடன் இசைவுபடுகிறார்.

"மனித உணர்வுகளைத் துல்லியமாக இனிமையாக வெளிக்கொணரக்கூடிய ஆற்றல் கவிதைக்குத்தானுண்டு. மனித குலத்தின் உன்னத இலக்கியப் படைப்புகளில் சிருஸ்டிகள் கவிதை வடிவத்தில்தான் புனையப்பட்டுள்ளன" என முன்னுரையில் கூறப்பட்டுள்ளது.

"ஒரு வரியில் உன்னை
உசுப்பேற்ற முடியுமெனில்,
ஒன்பது பக்கங்களுக்காய் ஆகும்
பொருளும் வளமும்தான் ஏன்?" என்று தனது

தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க...

---

14ம் பக்கத்தொடர்ச்சி...

நிலைமையையும் உருவாக்கினார். புலிகளின் தூண்டுதலால் தமிழர் விடுதலைக் கூட்டணி அந்த நல்ல தீர்வை ஆதரிக்க மறுத்ததாலும், ஐ.தே.க. எதிர்த்ததாலும், அரசாங்கத்தின் ஒருபகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் காலை வாரி எதிரணிப் பக்கம் தாவியதாலும், துாரதிஸ்டவசமாக அது நிறைவேறாமல் போய்விட்டது. ஆனால் சமீபத்தில்கூட சந்திரிகா பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை சிங்கள மக்கள் ஒருபோதும் எதிர்க்கவில்லை என நம்பிக்கையுடனும், உறுதிபடவும் கூறியுள்ளார். மக்கள் எதிர்க்கவில்லையென்றால், எந்த சக்திகளுக்கு அரசு அஞ்சுகிறதோ தெரியவில்லை.

எனவே, இன்றைய அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தைப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலையில் போட்டுவிட்டுத் தப்பித்துக் கொள்ளாமல், உண்மையில் அக்குழு மூலம் ஆக்கபூர்வமான தீர்வொன்றைக் காண்பதற்கு முன்கையெடுத்துச் செயல்பட வேண்டும். இல்லையானால் அது மீண்டும் தீர்வு எதுவும் காணப்படாமல் இழுபட்டுச் சென்று, தமிழ் மக்கள் அரசின் மீது நம்பிக்கை இழப்பதுடன், அந்நியத் தலையீட்டுக்கும் வழிவகுக்கும். அவ்வாறு ஒரு நிலைமை உருவாகுமானால், 30 வருடப் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததில் எந்தவிதமான அர்த்தமும் இல்லாமல் போவதுடன், கடந்த காலத்தை விட மோசமான ஒரு சூழலும் உருவாகலாம்.

வரலாற்றில் ஒருபோதும் இல்லாத அளவுக்கு இலங்கை எதிர்நோக்கி நிற்கின்ற இன்றைய அவலமான சூழலில் இருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதானால், இன்றைய அரசாங்கம் இனியும் சாக்குப் போக்குகள் சொல்லிக் காலத்தை இழுத்தடிக்காமல், இனப்பிரச்சினைக்கு 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் ஒரு நியாயமான தீர்வைக் காண்பதுடன், உண்மைகளைக் கண்டறிவதற்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் உடன் அமுல்படுத்த வேண்டும். இதைத் தவிர மாற்று வழிகள் எதுவுமில்லை.
*

முன்பக்கத்தொடர்ச்சி...

இந்தியாவைப் பொறுத்தவரை, இந்த இக்கட்டிலிருந்து தப்புவதற்கு இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு எட்டப்படுவதையே சாதகமான வழிமுறையாகப் பார்க்கிறது. அதன் மூலம் இலங்கைத் தமிழர்களை மட்டுமின்றி, இந்திய மத்திய அரசுக்கு தலையிடி கொடுத்து வரும் தமிழக அரசியல் கட்சிகளின் நெருக்குதல்களிலிருந்தும் தப்பித்துக்கொள்ள முடியும் என அது நம்புகிறது. அதனால்தான் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களித்திற்கான காரணத்தைக் குறிப்பிடுகையில், இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்காகவே அவ்வாறு செய்ததாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் குறிப்பிட்டார். அதே கருத்தையே இலங்கை சென்ற இந்திய நாடாளுமன்றக் குழுவுக்குத் தலைமைதாங்கிச் சென்ற இந்தியாவின் எதிர்க்கட்சித் தலைவி சுஸ்மா சுவராஜும் யாழ்ப்பாணத்தில் வைத்து ஒப்பித்துள்ளார்.

இப்பொழுது இலங்கையிடமிருந்து மேற்குலகும் இந்தியாவும் இரண்டு விடயங்களை எதிர்பார்க்கின்றன. ஒன்று, இலங்கை அரசாங்கம் நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு செய்துள்ள பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும் என்பது. இதையே அமெரிக்கத் தீர்மானமும் வலியுறுத்தியுள்ளது. மற்றது 13வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்பது. இது இந்தியாவின் எதிர்பார்ப்பாகும். அதாவது இலங்கை, சக்திவாய்ந்த மேற்குலகிடமிருந்தும், சக்திவாய்ந்த அயலக நண்பனான இந்தியாவிடமிருந்தும் இந்த இரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்றுமாறு நெருக்குதல்களுக்குள்ளாகியுள்ளது.

இந்த இரண்டு கோரிக்கைகளையும் பொறுத்தவரை, இலங்கை எந்தக் காரணத்தைக் கொண்டும் அவற்றைத் தட்டிக்கழித்துவிட முடியாது. ஏனெனில் இவை இரண்டும் இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை அல்லது அதனால் முன்மொழியப்பட்டவையாகும். எனவே அவற்றைத் தட்டிக்கழிப்பதற்கு இலங்கைக்கு எந்த முகாந்திரமும் இல்லை. ஆனாலும் இலங்கை அரசு இவற்றை நிறைவேற்றுவதில் தயக்கம் காட்டி வருகின்றது. அதற்குக் காரணம் அரசாங்கத்துக்குள்ளும் வெளியிலும் உள்ள பேரினவாத சக்திகளே என்பது இரகசியமானதல்ல. இந்த சக்திகளில் இப்பொழுது அரசாங்கத்தை இக்கட்டில் மாட்டுவதற்காக, தமிழ் மக்கள் மீது அக்கறையுள்ளவர்களாக வேசம் போடும் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி என்பனவும் முக்கியமானவைகள்.

அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக முன்னர் சர்வகட்சிக் கூட்டம் ஒன்றை சில காலம் நடாத்தியது. ஆனால் அதன் முடிவுகள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படாமல் கிடப்பில் போடப்பட்டுவிட்டன. அதைப் பல மாதங்களாக நடாத்துவதற்காகச் செலவளிக்கப்பட்ட பணம் யார் கணக்கில் எழுதப்பட்டிருக்கிறதோ தெரியவில்லை. பின்னர் போர் முடிவுற்றதைத் தொடர்ந்து, 13வது திருத்தச் சட்டத்துக்கும் அப்பால் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக ஜனாதிபதியே பகிரங்கமாக அறிவித்தார். பின்னர் அது பற்றிய முயற்சிகள் எதுவும் எடுக்கப்படாமல், பாராளுமன்ற தெரிவுக்குழு மூலம் தீர்வு காணப்போவதாக அரசாங்கம் அறிவித்தது. அதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு மறுப்புத் தெரிவித்ததுடன், பிரதான எதிர்க்கட்சியும் அதற்குத் தனது உறுப்பினர்களை நியமிக்காமல் காலம் கடத்துகின்றது.

அண்மையில் இலங்கை சென்ற இந்திய நாடாளுமன்றக் குழுவிடம் இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாகக் கருத்துரைத்த அரசாங்கத்தின் சிரேஸ்ட அமைச்சர்களில் ஒருவரான நிமால் சிறிபால டி சில்வா, அரசாங்கத்தில் பலவிதமான கருத்துக் கொண்டவர்கள் இருப்பதால், இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக ஒருமித்த முடிவை எடுக்க முடியாது இருப்பதாகவும், அதனால்தான் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை அமைத்துள்ளதாகவும் தெரிவித்தார். அது உண்மை என்று வைத்துக்கொண்டால் அரசாங்கம் செய்ய வேண்டியது என்ன?

அரசாங்கம் முதலில் தனது பங்காளிக் கட்சிகளிடம் பேசி இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டும். அடுத்ததாக எதிர்க்கட்சிகளிடம் பேசி அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அவற்றின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும். அத்துடன் இனப்பிரச்சினைத் தீர்வின் அவசியத்தை பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் விளங்க வைக்க வேண்டும். இந்த நடவடிக்கைகள் மூலம் தனது அரசாங்கத்துக்குள்ளும், பாராளுமன்றத்துக்குள்ளும், நாட்டு மக்கள் மத்தியிலும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒரு சமூக நிலையை உருவாக்க வேண்டும். ஆனால் இதில் எந்தவொரு முயற்சியையும் அரசாங்கம் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

இன்றைய அரசாங்கத்துக்குத் தலைமைதாங்கும் இதே சிறீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இரு தடவைகள் ஜனாதிபதியாக இருந்த போது, அவராகவே முன்வந்து சிறந்ததோர் தீர்வுத் திட்டத்தை முன்மொழிந்ததுடன், வெண்தாமரை இயக்கம் போன்றவற்றின் மூலம் அதற்கு ஆதரவாக நாட்டு மக்கள் மத்தியில் பிரச்சாரங்களை மேற்கொண்டு சாதகமான

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# தமிழகத்திலுள்ளவர்களுக்கே தனி ஈழம் தேவை! எழுத்தாளர் தமிழ் செல்வன் கூறுகிறார்!!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக் குழுவின் வழிகாட்டலில் செயற்பட்டு வரும் தமிழக முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கத்தின் தலைவராக இருக்கும் ச.தமிழ் செல்வன், ஒரு பிரபல எழுத்தாளருமாவார். அவர் தமிழகத்திலிருந்து வெளிவரும் 'ஆனந்த விகடன்' இதழுக்கு வழங்கிய பேட்டியொன்றின் சில முக்கியமான கேள்விகளும் பதில்களும் எமது வாசகர்கள் அறியும் பொருட்டு கீழே தரப்படுகின்றன. அவரது கருத்துக்களை ஏறத்தாழ மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடாகக் கொள்ள முடியும்.

கேள்வி: "ஈழ ஆதரவுப் போராட்டங்கள், முல்லைப் பெரியாறு பிரச்னை, அண்ணா ஹஜாரேயின் ஊழல் எதிர்ப்பு, கூடங்குளம் அணு உலை எதிர்ப்பு என இது போராட்டங்களின் காலம். ஆனால் 'மகிழ்ச்சி என்பது போராட்டம்' என்ற மார்க்சியத்தைக் கடைப்பிடிக்கும் இடதுசாரிகள் இந்தப் போராட்டங்களில் பங்கெடுக்கவில்லையே?"

பதில்: "ஈழப் பிரச்சினையைப் பொறுத்தவரை 30 ஆண்டுகளாக மாறாத உறுதியான நிலைப்பாட்டில் இருக்கிறோம். அரசியல் அற்ற, ராணுவப் பாதையில் ஈழ மக்களுக்குத் தீர்வு கிடைக்காது என்பது எங்கள் நிலைப்பாடு. சர்வதேச அரசியல் சூழலைக் கணக்கில் எடுக்காத விடுதலைப் போராட்டக் குழுக்களால்தான் ஈழத்தில் இவ்வளவு பெரிய அழிவு ஏற்பட்டது. தமிழகத்தில் நடைபெற்ற ஈழ ஆதரவுப் போராட்டங்கள் உணர்ச்சிவயப்பட்ட போராட்டங்கள். ஏன் இப்போது போருக்குப் பின் அத்தகைய எழுச்சி இல்லை? 'தனி ஈழம் சாத்தியமில்லை' என்று நாங்கள் மட்டும் சொல்லவில்லை. புலிகளின் ஆதரவாளர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசிய அமைப்பும். ஒன்றுபட்ட இலங்கையில் வட கிழக்கு மாகாணங்களை இணைத்த சுய நிர்ணய உரிமையைத்தான் கேட்கிறது. தமிழகத்தில் உள்ளவர்கள் மட்டும்தான் தனி ஈழம் கேட்கிறார்கள். இது ஈழ மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் செயல். இதை விமர்சித்தால், ராஜபக்சேவின் கைக்கூலி, இனத்துரோகி ஆகிய பட்டங்கள் இடதுசாரிகளுக்குக் கிடைக்கின்றன.

அதனால்தான் பல சமயங்களில் எங்கள் கருத்தைப் பதிவு செய்துவிட்டு மௌனம் ஆகிவிடுகிறோம். ஆனால், அதையும் கள்ள மௌனம் என்று குற்றம் சாட்டுகிறார்கள். கூடங்குளம் பிரச்சினையைப் பொறுத்த அளவில், மக்கள் ஏற்காத வரை அணு உலை செயல்படக்கூடாது என்பதுதான் எங்கள் நிலைப்பாடு.

முல்லைப் பெரியாறு பிரச்சினை அறிவியல்பூர்வமாக அணுகப்பட வேண்டிய பிரச்சினை. அணையை அரசியல் ஆக்குவது, அச்சுதானந்தன் செய்தாலும் தவறுதான். தமிழர்கள், மலையாளிகள் மீதான தாக்குதல்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை.

ஸ்பெக்ட்ரம் என்ற முழு நீள சினிமாவில் இடைவேளைக்குப் பிறகான காட்சிதான் அண்ணா ஹஜாரேவின் போராட்டம். இதன் இயக்குநர் கார்ப்பரேட் நிறுவனங்கள்தான். கார்ப்பரேட் ஊடகங்கள் யாரைத் தூக்கிப்பிடித்தாலும் அதில் சிக்கல் இருக்கிறது என்று அர்த்தம். ஊழலுக்கு எதிரான பேச்சு உருவாகி இருப்பதைத் தாண்டி இதில் ஆறுதலான அம்சங்கள் எதுவும் இல்லை. ஆனால், மேற்கண்ட பிரச்சனைகளை எல்லாம் பேசுபவர்கள் பெண்களுக்காகவோ தலித்துகளுக்காகவோ பேசுவது இல்லை. பொருளாதாரக் கோரிக்கைகளை முன்வைத்தும், தலித் மக்கள், பெண்கள் உரிமைகளை முன்வைத்தும் இடதுசாரிகள்தான் தொடர்ச்சியாகப் போராடி வருகிறார்கள். இடதுசாரிகளின் போராட்டங்களில் இந்தியா முழுவதும் ஆண்டுக்கு 300 தோழர்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். நாங்கள் எப்போதும் போராட்டத்தின் புதல்வர்கள்தான்."

கேள்வி: 'தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது தமிழ் உணர்வைக் கணக்கில் எடுக்காததால்தான் இடதுசாரி இயக்கம் வளரவில்லை' என்ற விமர்சனம் உண்டு அதேபோல் ஈழ ஆதரவு, மூவர் தூக்கு எதிர்ப்பு, முல்லைப் பெரியாறு பிரச்சினை என தமிழ்த் தேசியத்தின் பொற்காலம் இது. இப்போதும் தமிழின

தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க...

### *சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்*

'வானவில்' வாசகர்கள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த தமிழ் – சிங்களப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் குழு**